# ஐக்கிய தீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக்குழு) வெளியீடு

மலர் : 28
இதழ் : 1

யாழ்ப்பாணம்
1972
புரட்டாதி

# இந்த இதழில் ...


ஆசிரியர் தலையங்கம் 3

மறுசீரமைக்கப்பட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள் 5

வறியவர்களுக்காகவா கூட்டுறவுச் சங்கங்கள் 12
— *கலாநிதி அலெக்ஸ் லெயிட்லோ*

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் — தோற்றுவாயும்
வளர்ச்சியும் 17

"பாவனையாளர் கூட்டுறவு அபிவிருத்தி" என்பது
குறித்து நடைபெற்ற தேசிய ஆய்வு வகுப்பில்
நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 25


*0000*

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளருக்கான பரீட்சையில் சாதாரண பிரிவில் சித்தியடைந்தோர்:

இரண்டாவது பிரிவு

B. ஜோர்ஜ், E. நாகேந்திரம், M. குணரத்தினம், M. A. பழனிமுத்து, M இராஜேந்திரன், I. சிவசரணம் A. செல்லத்துரை, M. நல்லதம்பி.

மூன்ருவது பிரிவு

J. திலகரத்தினம், K. அரியபுத்திரன், ஸ்ரீமதி நகுலரதர், C. மகேசரத்தினம், S. ஸ்ரனிஸ்லோஸ், N. தில்லைநாதன்.

சித்தி

N. சந்திரலேகா, V. பாலசுப்பிரமணியசர்மா, V. வசந்த நாயகி.

நானசித்தி

S. சிவகுமாரன், T. விவேகானந்தன், C. ஸ்ரீநிவாசன், S. வன்னியகுலசிங்கம், L. இராஜநாயகம், S. பரம லிங்கம், K. சுப்பிரமணியம், T. வேலாயுதபிள்ளை, S. குமார சாமி, V. ஆறுமுகஜோதி, S. சிதம்பரநடராஜா, K. சபாநாதன், S கந்தசாமி, N. தங்கத்துரை, K. சுந்தர லிங்கம், S. பாலச்சந்திரன், P. திரவியம், R. லோக ராஜா, K. இராஜமலர் K. பலராமன், K. சிவகுருநாதன், K. கார்த்திகேயன், S இரத்தினசிங்கம், M. சுபாஷ் சந்திரபோஸ், S. ஜெயகௌரி,

மறுநானசித்தி

G. அல்பிரட், S. சோமஸ்கந்தன், A. குலசிங்கம், K. அசோகநாதன்.

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

மலர் 28 — யாழ்ப்பாணம், புரட்டாதி, 1972 — இதழ் 1

# புதிய ஆரம்பச் சங்கங்கள்

ப. நோ. கூ. சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டு ஏறக் குறைய ஓராண்டிற்கு மே லாகிவிட்டது.

ஓராண்டு காலத்திற்குள் இப்பெரிய ஆரம்பச் சங்கங் கள் தமது குறிக்கோள்கள் அனைத்தையும் எய்தியிருக் கும் என்று எதிர்பார்ப்பது பேதைமை. எனினும், தமது குறிக்கோள்களை எய்தக் கூடிய வகையில் அவை இயங்கிவருகின்றனவா என ஆராய்ந்து எடை போடு வது முறையானது.

மறுசீரமைப்புத்திட் டத்தை அறிமுகப்படுத்தும் போது அது கூட்டுறவு இயக் கத்திலேயுள்ள குறைபாடுக ளைக் களைந்தெறியும் எனத் திடமான நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. பின்வ ரும் முக்கிய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன:

பல சங்கங்கள் மிகச் சிறி யனவாக இருப்பதனால் அவை பொருளாதார ரீதி யாக ஒப்பேற்றமுடைய முடி யவில்லை. இதன் விளைவாக அவை திறமைவாய்ந்த

வேலையாளரை வேலைக்கமர்த்திக் கொள்ளமுடியவில்லை. இதனுல் சங்கங்களின் வளர்ச்சிதடைப்பட்டு அவை முன்னேற முடியாமல் இருக்கின்றன. இரண்டாவதாக உறுப்பினர்கள் பாராமுகமாய் இருப்பதனுல் தெரிவு செய்யப்படும் நிருவாகசபையினர் ஒன்றில் திறமையற்றவராய் அல்லது நேர்மையற்றவராய் காணப்படுகின்றனர். மூன்ருவதாக மேற்கூறிய காரணிகளின் விளைவாக கூட்டுறவு இயக்கத்திலே பல ஊழல்கள் நிலவுகின்றன. மேலும், சங்கங்களுக்குப் போதிய கல்வி வசதிகளையும் ஆலோசனைச் சேவைகளையும் இரண்டாம் மட்டச் சங்கங்கள் வழங்கவில்லை. இவற்றைத்தவிர உறுப்பினருக்கு வேண்டிய பொருள்கள்யாவும் சங்கங்களில் கிடைப்பதில்லையென்றும் பணியாளர் வாடிக்கையாளரோடு பண்பாகப் பழகுவதில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த மேற்குறிப்பிட்ட காரணிகள் இரவோடு இரவாகமறைந்திருக்கும் என நாம்எதிர்பார்க்கமுடியாது. எனினும், இவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என ஆராயப்படல் வேண்டும்.

பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களின் பொருளாதார, சமூக, கல்வி, கலாசார பொழுதுபோக்குத் தேவைகளை நிறைவுபடுத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாக இருப்பதனுல் எந்த அளவிற்கு இப்புதிய சங்கங்கள் இத்தேவைகளை நிறைவுபடுத்தியிருக்கின்றனஎன்பதை கூட்டுறவுத் திணைக்களம் ஆராய்வது நன்மை பயக்கும்.

இத்தகைய ஆய்வு புதிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்கள் தமது குறிக்கோள்களை எய்தும் வகையில் செம்மையான பாதையில் செல்கின்றனவா எனத் தீர்மானிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவும். ஏதேனும் குறைகள் இருப்பின் அவற்றினைத் திருத்தி சங்கங்கள் தடம்புரளாது பார்த்துக் கொள்வதற்கும் உதவும்.

(முற்றொடர்)

# மறுசீரமைக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள்

45, நிறைவெண்

ஆணையாளராலோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்பட்டாலொழிய மற்றும்படி குறைந்தது 25பிரதிநிதிகளோ அல்லது பொதுச்சபையிலுள்ள மொத்த பிரதிநிதிகளில் நாலிலொரு பங்கோ- இவ்விரண்டில் எது குறைந்த தொகையோ — அது பொதுச்சபையின் எந்தவொரு கூட்டத்திலும் விடயங்களைத் தீர்மானிப்பதற்கு சமுகமாயிருத்தல் அவசியம். ஆணையாளராலோ அல்லது அவர் அதிகாரம் வழங்கும் ஒருவராலோ கூட்டப்படும் எந்தவொரு பொதுச்சபைக் கூட்டத்துக்குமுரிய நிறைவெண் மூன்று பிரதிநிதிகளாக இருக்கும்.

46 (1) பொதுச்சபையின் முன்வரும் எந்த விடயமும் தீர்மானத்தின் மூலமே நிர்ணயிக்கப்படும். இந்த உப-விதிகளில் வேறுவித ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய போதிய நிறைவெண் சமுகமளித்திருந்த ஒரு கூட்டத்தில் வந்திருந்தோரின் அரைவாசிக்கு மேற்பட்டோர் சாதகமாக வாக்களித்தால்தான் ஒரு தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். பொதுச்சபையின் பிரதிநிதிகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கின் வாக்குகளைப் பெற்றாலொழிய ஒரு பொதுச் சபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானம் அடுத்துவரும் ஆறு மாத காலத்திற்குள் வேறொரு கூட்டத்திலும் மறுபரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(2) 52ம் உப - விதியின்கீழ் தேவையான பணிப்பாளர்களைத் தெரிந்தெடுப்பதற்காக முறையாக முன்மொழியப்பட்டும், வழிமொழியப்பட்டுமுள்ள அபேட்சகர்களின் பெயர்கள் பொதுச்சபைக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படவேண்டும். எத்தனை பணிப்பாளர்களைத் தெரிந்தெடுக்கப்படவேண்டுமோ அத்தனை வாக்குகளை அளிக்க ஒவ்வொரு பிரதிநிதிக்கும் உரிமையுண்டு. ஆனால் எந்த ஓர் அபேட்சகர் சார்பிலும் ஒரு பிரதிநிதி ஒரு வாக்குக்கு மேல் போட முடியாது. (1ம்) உப—விதியின் ஏற்பாடு எப்படியிருப்பினும் ஆகக்

கூடிய தொகையான வாக்குகளைப் பெறும் அபேட்சகர் தெரிவு செய்யப்பட்டதாகப் பிரகடனப்படுத்தப்படுவார்.

47. பொதுக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கும் பிரதிநிதியாகவுள்ள ஒவ்வோர் பொதுச் சபை உறுப்பினர்க்கும் ஒரு வாக்கு உண்டு. ஒரு விடயம் ஆராயப்படுமுன், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பொது விருப்பத்தின்படி கூட்டத்தலைவர் முடிவுகட்டியபின் வாக்களித்தல் வாக்குச்சீட்டு மூலமோ, கைகளை உயர்த்தல் மூலமோ நடைபெறும்.

48. சங்கத்தின் தலைவரோ அவர் வராதவிடத்து உபதலைவரோ அவ்விருவரும் இல்லாதவிடத்து பொதுவான சம்மதத்தோடு தெரிந்தெடுக்கப்பட்ட வேறொரு பொதுச்சபை உறுப்பினரோ இச்சங்கத்தின் பொதுக் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்கவேண்டும். அப்படியானதொரு பொதுக் கூட்டம் ஆணையாளராலோ அல்லது அவரின் அதிகாரம் பெற்றவரோ விரும்பினால் தலைமை தாங்கலாம். வாக்குகள் சரிபங்காக வருமிடத்து அக்கூட்டத்தின் தலைவருக்கு அறுதியிடும் வாக்கு ஒன்று உண்டு.

49. ஆணையாளர் அல்லது இந்த விடயத்துக்கென அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் அல்லது அப்பகுதிக் கூட்டுறவுப் பரிசோதகர் பொதுச் சபையின் எந்தக் கூட்டத்துக்கோ, வருகைதந்து பேசுவதற்கு உரிமை உண்டு.

50- அந்தப்பகுதிக் கூட்டுறவுப் பரிசோதகரையும், மீன்பிடிப் பரிசோதகரையும் பொதுச்சபையினதும், பணிப்பாளர் சபையினதும் ஒவ்வோர் கூட்டத்துக்கும் வருமாறு அழைப்பது செயலாளரின் கடமையாகும்.

51. பொதுச்சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள்.

பொதுச்சபைக் கூட்டமொன்றின் நிகழ்ச்சி நிரலிலுள்ள ஒவ்வொரு விடயமும் தீர்மானித்து முடிந்தவுடன் அது தொடர்பான நிகழ்ச்சிகளை ஒரு நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும். அப்படியான நிகழ்ச்சிக் குறிப்புக்களை கூட்டத்திலே அடுத்த விடயம் எடுக்கப்படுமுன் கூட்டத் தலைவராலும், செயலாளராலும் சபையிலே வாசித்துக் காட்டப்பட்டு கையொப்பமிடப்படவும் வேண்டும். சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒவ்வொன்றின் நிகழ்ச்சிக் குறிப்பும் அக்கூட்டத்தின்பின் நடைபெறும் பணிப்பாளர் சபையின் முதல் கூட்டத்தில் சங்கத்தின் செயலாளரால் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

52. பணிப்பாளர் சபை

இச்சங்கத்துக்குப் பணிப்பாளர் சபை ஒன்று உண்டு. அச்சபை கீழ்க்காணுமாறு அமையும்.

(அ) ஆறுபேருக்கு மேற்படாது தெரிவுசெய்ய பொதுச்சபைக்கு உரிமையுண்டு.

(ஆ) இரண்டு பேர் ஆணையாளரால் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு அங்கத்துவ

சங்கங்களின் நியமனகாரர்கள் எனினும் (அ), (ஆ) வாசகங்களின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் 22 (1) (அ) தொட்டு (ஐ) வரையிலுள்ள உப-விதிகளின்படி தகுதியற்றவர்களாகக் காணப்படாதிருத்தல் வேண்டும். ஒரு அங்கத்துவ சங்கத்தின் நியமனகாரர் அச்சங்கத்தினால் அவரது நியமனம் நீக்கப்படும் வரை தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருப்பர்.

53. ஒரு தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளரின் பதவி நிலை இயல்புகளையொட்டி முடிவுறும்.

(அ) சங்கத்தின் உறுப்பினராக இல்லாது போனால்.

(ஆ) எந்தக் கிளைக்குழுவிலேனும் உறுப்பினராக இல்லாது போனால்.

(இ) சங்கச் செயலாளருக்கு எழுத்துமூலம் ஒருமாதகால முன்னறிவித்தல் கொடுத்த பின்பு விலகிக்கொள்ளல்,

(ஈ) பொதுச்சபைக் கூட்டத்தில் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பதவியிலிருந்து நீக்கப்பட்டால்.

54. (அ) பொதுச்சபையின் அடுத்துவரும் வருடாந்தக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர் இளைப்பாற வேண்டும். பொதுச்சபையில் பிரதிநிதி என்ற அந்தஸ்து இருக்குமானால் இளைப்பாறும் பணிப்பாளர் ஒருவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம். ஆனாலும் பணிப்பாளர் பதவியிலே தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் இருந்தவர் இளைப்பாறிய திகதியிலிருந்து குறைந்தது ஒருவருடகாலத்திற்காவது பணிப்பாளராக மீண்டும் தெரிவுசெய்யப்பட அனுமதிக்கப்படமாட்டார்: பணிப்பாளர் ஒருவர் தனது முழுப்பதவிக்காலம் முடிமுன்னர் பதவியிலிருந்து விலகினாலோ அல்லது பணிப்பாளர்கள் தங்களது முழுப்பதவிக் காலம் முடியமுன்னர் சபைகளாகவே விலகினாலோ, அவரோ அல்லது அவர்களோ விலகிய திகதியிலிருந்து குறைந்தது ஒருவருடகாலத்துக்கு திருப்பித் தெரிவு செய்யப்பட மாட்டார்.

(ஆ) பொதுச்சபையில் செய்த தீர்மானமொன்றின்மேல் இச்சங்கத்தின் அலுவல்களை நடத்துவதற்கு மூன்று பேருக்கு அதிகமாகாத ஒரு சபையை நியமிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

55. தெரிவு செய்யப்பட்ட ஒரு பணிப்பாளர் இறந்ததாலோ விலகியதாலோ அல்லது வேறெதனாலோ பணிப்பாளர் சபையில் ஏதாவது வெற்றிடம் ஏற்படுமானால், சந்தர்ப்பங்கள் அனுமதிக்கக் கூடியளவு கெதியில் பொதுச் சபையின் கூட்டத்தை இது விடயமாக கூட்டி 53 (2) உப-விதியின்கீழ் செய்த உடன் சேர்த்தலை உறுதிப்படுத்தவோ அல்லது வேறொரு பணிப்பாளரைத் தெரிவு செய்யவோ வேண்டும்.

56. ஆணையாளரால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் அவர்கள் நியமிக்கப்பட்ட கால எல்லைவரைக்குமே பதவியில் இருக்க முடியும். அவர்களின் பதவிக்கால எல்லை முடிவதற்குள் எந்தநேரமும்

ஆணையாளர் அவர்களது நியமனத்தை ரத்து செய்யலாம். ஒரு நியமன பணிப்பாளர் தனது பதவியிலிருந்து விலகினுல் அவரின் இடத்துக்கு இன்னெரு பணிப்பாளரை ஆணையாளர் நியமனம் செய்யலாம்.

57. 52 தொட்டு 56 வரையிலான உப-விதிகளின் ஏற்பாட்டின்படியில்லாது பதிவாளர் இச்சங்கம் பதியப்பட்டபின் 9 பேருக்கு அதிகமாகாது ஒரு பணிப்பாளர் சபையை தான் விரும்பும் ஒருகால எல்லைக்குக் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்ய அதிகாரம் உண்டு. அவர்களில் ஒருவரைத் தலைவராக பதிவாளர் நியமனம் செய்யலாம். அப்படியாக நியமிக்கப்படும் பணிப்பாளர்சபை தற்காலிக பணிப்பாளர்சபை எனப்படும். இந்த உபவிதிகளின்கீழ் முறையாக உருவாக்கப்பட்ட பணிப்பாளர்சபைக்குரிய அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் எல்லாம் இதற்கும் உண்டு. அத்தோடு முறையான ஒரு பொதுச்சபை வருவிக்கப்படும்வரை இதற்குப் பொதுச்சபையின் அதிகாரங்களும் உண்டு. அப்படியாக நியமிக்கப்படுபவர்களில் மூன்றுக்கு அதிகமாகாதோர் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். ஐந்து பேருக்கு அதிகமாகாதோர் சங்கநடவடிக்கைகளில் தொடர்புள்ள அரசாங்க திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உத்தியோகத்தராய் இருத்தல் வேண்டும். நிலைய உறுப்பினர்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக ஒருவர் ஆணையாளரால் நியமிக்கப்படுவர்.

**பணிப்பாளர் சபையின் தொழில்கள்**

58. சட்டம், இந்த உப-விதிகள், பொதுச்சபையின் தீர்மானங்கள் என்பவற்ருல் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைய பணிப்பாளர் சபை கீழ்வரும் கடமைகளைச் செய்யும்:

(1) தங்களுக்குள்ளேயே சங்கத்தின் தலைவரையும், உபதலைவரையும் தெரிவு செய்யும்.

(2) பணிப்பாளர் சபையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஆட்களை உடன் சேர்த்தல். பணிப்பாளர் சபைக்கு அப்படியாக உடன் சேர்க்கப்படும் உறுப்பினர் பொதுச்சபையின் அடுத்த கூட்டம்வரை பதவி வகிப்பார்.

(3) தனது உறுப்புரிமையை ரத்து செய்ய ஒரு கிளைச் செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கு எவர் ஒருவர் செய்த மேன்முறைப்பாட்டையும் தீர்மானித்தல்.

(4) பொதுச்சபை விதிக்கும் ஆகக்கூடிய அளவிற்கு அமைய இச்சங்கத்தின் வேலைகளுக்குத் தேவையான வளங்களைப் பெறுவதற்குரிய வழிகளையும், நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல்.

(5) பொதுமுகாமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் அத்திட்டத்தில் குறிப்பிட்ட சம்பளம், ஒழுக்காற்றுக்குரிய கட்டுப்பாடு, வேலைநீக்கம் போன்றவற்றின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒரு

பொதுமுகாமையாளரதும், மற்றும் சிரேட்ட முகாமை உத்தியோகத்தரதும் உதவியைப்பெறுதல்.

(6) ஆணையாளரதும், பொதுச்சபையினதும் முன் அங்கீகாரத்தோடுஇச்சங்கத்துக்குத் தேவையான நிலையான சொத்துக்களைக் கொள்வனவு மூலமோ அல்லது வேறுவிதத்திலோ பெறுதல்.

(7) ஆணையாளரதும், பொதுச்சபையின் முன் அங்கீகாரத்தோடு இச்சங்கம் வைத்திருக்கும் நிலையான சொத்துக்கள் எதையும் விற்பனை செய்தல்.

(8) பங்குகளைப் பிரித்து ஒதுக்குதல், பங்குகளை மாற்ற அதிகாரம் அளித்தல்.

(9) இச் சங்கத்தின் ஒரு தொழிலாளி மூலமோ அல்லது உத்தியோகத்தர் மூலமோ சட்ட நடவடிக்கைகளைத் தொடர்தல், நடாத்துதல், பாதுகாத்தல், இணங்குதல் அல்லது கைவிடுதல்.

(10) கடன் வழங்குவதற்கான திட்டங்களை வரைதல்.

(11) இச்சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்கு தேவைப்படும் உபகுழுக்களை நியமித்தல்.

### பணிப்பாளர் சபையின் கடமைகள்

59. (அ) தேவையேற்படும் போதெல்லாம் பொதுச்சபையின் வருடாந்தக்கூட்டத்தையும், இச்சபையின் வேறுகூட்டங்களையும் கூட்டுதல்.

(ஆ) கிளைக்குழுக்களும், கிளைப் பொதுக்கூட்டங்களும்முறைப்பாடு செய்தவற்றையும், அறிவுரை வழங்கியவற்றையும் ஆராய்ந்து பார்த்து, நிருவாகத்தினர் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு நெறிப்படுத்தல்.

(இ) இச்சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் பதிவுச் சுவடிகளை பராமரிப்பதற்கும், எல்லாச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கணக்குகளை வைத்திருப்பதற்கும் ஒழுங்கு செய்தல்; ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் பரிசோதனை நடாத்திய ஐந்தொகையையும், கணக்குகளின் கூற்றையும் பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

(ஈ) வரப்போகும் நிதி ஆண்டில் இச்சங்கத்தின் உத்தேச நடவடிக்கைகள் பற்றிய வரவு செலவு மதிப்பீட்டுவிபரத்தை அல்லது வரவு செலவு மதிப்பீட்டு விபரத்தை அல்லது வரவு செலவுக் கணக்கை அந்த நிதி ஆண்டு தொடங்குவதற்கு குறைந்தது இரண்டு மாதங்கள் முன்னுடியே பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

(உ) எந்தப் புதுமுயற்சியின் தொடர்பாகவும் சாத்தியக் கூற்று அறிக்கைகளைப் பெற்று,செலவெதையும் செய்யுமுன்னர் அவைகளை மதிப்பிடுதல்.

(ஊ) ஒவ்வொரு மாதமும் சபையின் அலுவல்களைப்பற்றி தேர்ச்சி அறிக்கையையும், சபையால் தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கான மற்றும் விசேட அறிக்கைகளையும் பொது முகாமையாளரிடமிருந்து பெறுதல்; அவற்றை வரவு செலவுக் கணக்கோடும், குறித்த இலக்குகளோ

டும் ஒத்து நோக்கி பொது முகாமையாளருக்கு தகுந்த பணிப்புரைகள் வழங்கல்.

(எ) கீழ் குறிக்கப்படும் முகாமைப் பிரிவுகளுக்கு நடைமுறை விதிகளையோ, அல்லது நடைமுறைகளையோ வரைதல்.—

(1) முதலையும், நிதியையும் திரட்டிப் பயன்படுத்துவது பற்றிய நிதிக்கொள்கை.

(2) வியாபாரப் பொருட்களை இருப்பில் வைத்திருக்கவேண்டிய முறை, அவற்றின் தொகை, விலைவாசிகள், பெற்றுக்கொள்வதற்கும் பணம் கொடுப்பதற்கும் உள்ள வழிகள், நியதிகள் ஆகியவற்றை நிரைவகுக்கும் கொள்வனவுக் கொள்கை.

(3) ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கிணங்க வேலைக்கமர்த்தல், பயிற்சி, அபிவிருத்தி, சம்பளம்' உத்தியோக, உயர்வு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பற்றிய ஆளணிக் கொள்கை.

(4) வெவ்வேறு வியாபாரப் பொருட்களின் விலை ஏற்றத் தாழ்வுகளையும் விற்பனை நியதிகளையும் தீர்மானிக்கும் விலை மதிப்புக்கொள்கையும் மற்றும் விநியோகக் கொள்கையும்.

5. கல்வி, கலாசார களியாட்ட, சமூகசேவை நடவடிக்கைகள்.

(ஏ) இச்சங்கம் சீராக இயங்குவதை நிச்சயப்படுத்தல். இந்த உப-விதிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய விதிகளிலும் உள்ள ஏற்பாடுகளைச் செயற்படுத்தலும், தேவைகளை கடைப்பிடித்தலும்; இச்சங்கத்தின் பொதுச்சபைக்கோ குறித்த ஓர் உத்தியோகத்தர் ஒருவருக்கோ அல்லது பலருக்கோ விசேடமாக ஒப்பரிக்கப்படாமலோ குறிக்கப்படாமலோ உள்ள மற்றஎல்லா விடயங்களையும், இச்சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்காக தேவையேற்டடுப்போது செய்தல்.

**பணிப்பாளர்களின் கடமையும் பொறுப்பும்**

60. சட்டத்துக்கும், இந்த உபவிதிகளுக்கும் ஏற்ப பணிப்பாளர் சபையானது ஊக்கமுடன் தனது கருமங்களைச் செய்யவும் கடமைகளை ஆற்றவும் வேண்டும். இச்சபை சட்டத்தையும், இந்த உபவிதிகளையும் கடைப்பிடிக்கத் தவறியதாலோ அல்லது தேவையான ஊக்கத்தையும் சாதுரியத்தையும் கையாளத் தவறியதனாலோ இச்சங்கத்துக்கு ஏற்படும் எந்தவித நட்டத்துக்கோ, சேதத்துக்கோ, தண்டத்திற்கோ, சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒன்றாகவும் பல்ராகவும் பொறுப்பாளியாக இருப்பர்.

**பணிப்பாளர்சபைக் கூட்டங்கள்**

61. குறைந்தது மாதமொரு முறையும், தேவையேற்படும் நேரங்களிலும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்படும். எந்த விடயத்தையும் தீர்மானிப்பதற்கு கூட்டத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் வரவு அவசியம். தலைவரோ அல்லது அவர் வராதவிடத்து உபதலைவரோ அல்லது அங்கு சமுகமளித்தவர்களால் உறுப்பினர்களுக்குள் நேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரோ தலைமை தாங்குவார். ஒவ்வொரு உறுப்பின

ருக்கும் ஒருவாக்கு உண்டு. வாக்குகள் சரிபங்காக வருமிடத்து கூட்டத்தலைவருக்கு அறுதியிடும் வாக்கு ஒன்று உண்டு. தலைவரினாலோ பணிப்பாளர் சபையின் பெரும்பான்மையினராலோ, சபையினாலோ, ஆணையாளராலோ அல்லது தலைவர், சபை, ஆணையாளர் ஆகியோரின் வேண்டுதலின் பேரில் செயலாளராலோ, அல்லது சபையின் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் எழுத்துமூல வேண்டுதலினாலோ கூட்டப்பட்டால் பணிப்பாளர் சபை கூடவேண்டும். பணிப்பாளருக்குள் வெற்றிடம் இருக்கின்ற காரணத்தாலோ அல்லது எந்தவொரு பணிப்பாளரின் நியமனத்தாலோ தெரிவிலோ தவறு இருக்கின்ற காரணத்தாலோ பணிப்பாளர் சபையின் நடவடிக்கையோ செயலோ பெறுமதியற்றதாக்கப்படமாட்டாது.

சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள்

62. ஒவ்வொரு பணிப்பாளர் சபைக் கூட்டத்திலும் பேசப்பட்டோ அல்லது தீர்மானிக்கப்பட்டோவுள்ள எல்லா விடயங்களும் நிகழ்ச்சிக்குறிப்புப் புத்தகமொன்றில் பதியப்பட வேண்டும். கூட்ட முடிவில் அந்த நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் கூட்டத் தலைவரும், அங்கு சமுகமாயிருந்த சபை உறுப்பினர்களும் கையொப்பமிடல் வேண்டும்.

தலைவரும் உபதலைவரும்

63. (1) இச்சங்கத்தின் தலைவரையும், உபதலைவரையும் பணிப்பாளர் சபை தங்களுக்குள் தெரிவு செய்யும். அடுத்த வருடத்துக்குரிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் வரையிலோ அல்லது பணிப்பாளர் சபையாலோ அல்லது ஆணையாளராலோ அவர்கள் நீக்கப்பட்ட காரணத்தால் பதவியில் இல்லாது போகும் வரையிலோ, அல்லது இந்த உப-விதிகளில் குறிப்பிட்ட படி தகுதியின்மை காரணமாக பணிப்பாளராக இல்லாது போகும்வரையிலோ, அல்லது செயலாளருக்கு எழுத்துமூலம் ஒருமாதகால முன்னறிவித்தல் கொடுத்தபின் விலகிக்கொள்ளும் வரையிலோ அவர்கள் பதவி வகிப்பர்.

(2) மேற்கூறிய ஏற்பாட்டின் படியில்லாது ஆணையாளர்:—

(அ) இச்சங்கப் பொதுச்சபையின் முதற்கூட்டம் வரையில் ஒரு தலைவரையும் உபதலைவரையும் இச்சங்கத்துக்கு நியமிக்கலாம். ஆனால் அப்படியாகச் செய்யப்பட்ட தலைவரினதும் உபதலைவரினதும் நியமனம் இந்த உப-விதிகளின் கீழ் ஒரு தலைவரையும் உபதலைவரையும் தெரிவு செய்வதோடு முடிவடைந்துவிடும்.

(ஆ) அதற்குப்பின்னர் எந்த நேரத்திலும் சங்கத்தின் தலைவரையோ உபதலைவரையோ அல்லது இருவரையுமோ நியமனமூலம் நியமிக்கலாம். அதனால் பணிப்பாளர் சபையால் தெரிவு செய்யப்பட்ட தலைவரோ உபதலைவரோ அல்லது இருவருமோ தானாகவே பதவியிலிருந்து நீக்கப்படுவர் அல்லது அதிகாரமற்றவர்களாக ஆக்கப்படுவர். (வளரும்)

(முற்றொடர்)

# வறியவர்களுக்காகவா கூட்டுறவுச் சங்கங்கள்?

— கலாநிதி அலெக்ஸ் லெயிட்லோ

**கருத்துக் குழாங்கள்**

(1) முதல் கருத்துக்குழாத்தை கூட்டுறவுப்பொதுநல வாயக் குழாம் எனலாம். இதனைச் சார்ந்தவர்கள் கடும் மரபுவாதிகள் எனலாம். கூட்டுறவுக்கொள்கைகளை மனித சமுதாயத்திலேபல்வேறு துறைகளிலே கடைப்பிடிப்பதன்மூலம் கூட்டுறவு இயக்கம் மேம்பட்டு விளங்கும் என இவர்கள் கருதுகின்றனர். இதனைத்தான் றொபேர்ட் ஓவன் விரும்பினார். ஆனால் இன்று இவர்களுடைய கருத்து நடைமுறைச்சாத்தியம் அற்றது என்றும் சற்று பழமைப்பட்டதென்றும் கருதப்படுகின்றது. இக்கருத்துடையவர்கள் கண்டிப்பான கோட்பாட்டுப் பற்றுள்ளவர்களாகவும், இலட்சியவாதிகளாகவும் விளங்குகின்றனர்.

(2) இரண்டாவது கருத்துக்குழாத்தை திருந்திய முதலாளித்துவ கருத்துக்குழாம் எனலாம். இக்குழுவினரின் கருத்துப்படி கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவ முயற்சிகளே. முதலாளித்துவ முறையின் மிகைப்பாடுகளைக் கட்டுப்படுத்தும்பொருட்டு சங்கங்கள் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கின்றன. சொந்த ஆதாய அமைப்பு கட்டுக்கடங்காமல் போவதைத் தடுப்பதற்கு கூட்டுறவு ஓர் ஆளுநர்போன்று பணியாற்றுகின்றது என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்களுடைய கோட்பாட்டின்படி கூட்டுறவு ஓர் அளவுகோல் போன்றது. கூட்டுறவு சற்றுக்கடைப்பிடிக்கப்பட்டாலே பொருளாதார அமைப்பில் ஏற்றத்தாழ்வு இல்லாதிருக்கும் என அவர்கள் நினைக்கின்றனர். ஆதாயத்திற்காக நடாத்தப்படும் வியாபாரத்திற்கும்சேவைக்காக நடாத்தப்படும் வியாபாரத்திற்கு மிடையே உள்ள முரண்பாட்டை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. வியாபாரத்தில் ஆதாயத்தை ஈட்டும் நோக்கத்தை நீக்குவதற்கு றொச்டேல் முன்னோடிகள் விழை

யவில்லை என்றும் எல்லோருக்கும் வாய்ப்பளிப்பதே அவர்களது நோக்கமாகும் என்றும் இச்சாரார் வாதிடுகின்றனர்.

(3) சமூக உடமைக்குழாம் மேற்குறிப்பிட்ட இரு கருத்துக் குழாங்களிலிருந்தும் வேறுபட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் சமூக உடமை பொருளாதார அமைப்பின் ஒரு கூறு என அது கருதுகின்றது. இயன்றளவு முதலாளித்துவத்தை அகற்றுவதற்கு அரசிற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுதுணையாக இருக்கும். எனவே இக்கருத்துக்குழாம் இரண்டாவது கருத்துக்குழாத்தின் எதிர்த் துருவமாய் விளங்குகின்றது. இரண்டாவது கருத்துக் குழாத்தின்படி கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் முயற்சியின் நண்பர்கள் அல்லது உறவினர்கள். மூன்றும் கருத்துக்குழாத்தின் கோட்பாட்டின்படி கூட்டுறவு இயக்கம்பொதுத்துறையின் கூட்டாளி. அமெரிக்காவிலுள்ள பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும் கனடாவிலுள்ள சில கூட்டுறவுச் சங்கங்களும் இரண்டாம் கருத்துக்குழாத்தைச் சார்ந்தவை. சமூக உடமை நாடுகளிலும் வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றும் கருத்துக் குழாத்தைச் சார்ந்தவை.

(4) இறுதியாக நான்காவது கருத்துக்குழாத்தை கூட்டுறவுத்துறை கருத்துக் குழாம் எனலாம். கூட்டுறவுச்சங்கங்கள் முதலாளித்துவத்திலிருந்தும், சமூக உடமையிலிருந்தும் வேறுபட்டவை என்றும் இவ்விரு கோட்பாடுகளுக்கும் இடைநடுவில் அவை உள்ளன என்றும் நான்காவது குழாத்தினர் கருதுகின்றனர். அவர்களுடைய கருத்துப்படி கூட்டுறவுச்சங்கங்கள் நடுவழியைக் கடைப்பிடிப்பதால் அவை பெரிய வியாபாரத்தைச் சார்ந்தவையுமல்ல, பெரிய அரசைச் சார்ந்தவையுமல்ல. கூட்டுறவு இயக்கத்திற்குத் தனக்கு உரித்தான கோட்பாடு உண்டு; அறநெறி உண்டு. கூட்டுறவு இயக்கத்தில் பொருளாதாரக் கூறுகளும், சமூகக்கூறுகளும் கலந்திருக்கின்றன. அதற்கு சமூக, கல்வி சார்ந்த நோக்கங்கள் உள. அதற்கென திட்டவட்டமான வியாபாரக் கொள்கைகள் உள. இக்கருத்துக்குழாம் வியாபாரத்திறனையும், சீர்திருத்த உளப்பாங்கையும் இணைக்க முயல்கின்றது. இது கடினமான முயற்சி

எனச் சொல்ல வேண்டிய தில்லை. வியாபாரத்தைப் பொறுத்தவரை இக்கொள் கையினைப் பின்பற்றுபவர் கள் யதார்த்தத்தில் காலூ ன்றி நிற்கும் அதே சமயத் தில் சமத்துவமும் சமூக நீதியும் நிறைந்த ஒரு சமு தாய அமைப்பு என்னும் விண்மீனை நோக்கியவண் ணமே இருக்கின்றனர். இத் தகைய சமுதாய அமைப்பை கூட்டாக உழைக்கும் மனி தர்களின் தன்னம்பிக்கை மூலமே உருவாக்கலாம் என அவர்கள் நம்புகின்றனர். ஐரோப்பாவைச் சேர்ந்த கலாநிதி வொக்வே போன் றவரும் கனடாவைச் சேர் ந்த கலாநிதி கோடி போன் றவரும் இக்கருத்துக் குழாத் தைச் சார்ந்தவர்கள். இக் கருத்துக்குழாத்தைச் சார்ந் தவர்களே இன்றைய கூட் டுறவு இயக்கத்தின் தலை சிறந்த சிந்தனையாளர் ளாக விளங்குகின்றனர்.

நாம் தொடக்கத்தில் எழுப்பிய வினாவிற்கு–கூட்டு றவுச் சங்கங்கள் வறியவர் களுக்காகவா – என்பதற்கு மீண்டும் வருகின்றோம். வறி யவர்களுக்குக் கூட்டுறவு இயக்கத்தில் இடமில்லை எனக் கருதுவோர் இரண் டாம் கருத்துக் குழாத்தைச் சார்ந்தவர். இக்கருத்துக் குழாம் முதலாளித்துவ முறைகள் பெறுமதிகள் என்ற நோக்குக் கோணத்தி லிருந்து கூட்டுறவுச் சங்கங் களை நோக்குகின்றது. இது உண்மையான கூட்டுறவு அல்ல என வாதிப்பதில் பயன் எதுவும் இல்லை. ஏனெ னில், மற்றவர்களைப் போன்று இக்கருத்துக்குழா த்தினரும் உறுதியாகவும் உண்மையாகவும் தமது கருத்தில் நம்பிக்கை வைத் திருக்கின்றனர். தோடம் பழங்களைச் சந்தைப்படுத் தும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் கூட்டுறவு முறை தமக்கு அனுகூல மான ஒரு வியாபாரமுறை என்பதை உணர்கின்றனர். அந்த வர்க்கத்திற்கு கூட்டு றவு இயக்கம் தனியார் முயற் சிக்கு ஓர் அரணாகத் தோன் றுகின்றது. கூட்டுறவுக் குடும்பத்திலே பல மனைகள் உள.

இதில் வறியவர்களின் நிலை என்ன? இரண்டாம் குழாத் தின் கருத்து மேலோங்கி இருந்தால் வறியவர்கள் உய்ய வழி இல்லை. கூட்டுறவு மூலம் வறியவர்கள் தமக்கு அனுகூலமான வாழ்க்கை முறையை உருவாக்க முடி யும் என்பதை இக்கருத்துக் குழாத்தினர் ஏற்றுக்கொள்

வதில்லை. கடந்த 150 ஆண்டுகளிலே வறியவர்கள் கூட்டுறவுமூலம் நிலைநாட்டிய பெரும் சாதனைகளை இவர்கள் கணக்கில் எடுக்கத்தவறுகின்றனர். சாதாரண மக்கள் கூட்டுறவு மனப்பான்மையால் உந்தப்பட்டால் பெரும் சாதனைகளை நிலைநாட்டமுடியும் என்பதற்குப் பல சான்றுகள் உள. எடுத்துக்காட்டாக ருெச்டேல் முன்னோடிகள், மேற்குக் கனடாவின் வீரமிக்க விவசாயிகள் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இரண்டாங் கருத்துக் குழாத்தைச் சார்ந்த கூட்டுறவாளர்களின் கருத்துப்படி வறியவர்களுக்கு இடமேயில்லை. ஏனெனில், முதலாளித்துவத்தின் இயல்பு வறுமையை உண்டுபண்ணி பின்பு அதனைச் சரியென முறைமை ஆக்குவதே.

இப்பொழுது நான்கு கருத்துக்குழாங்களில் நான் எதனைச்சார்ந்தவன் என்பது புலனாகும். வறியவர்களுக்கு இடமில்லை என்ற கருத்துக் குழாத்தினை நான் சார்ந்தவன் அல்லன்.

(முற்றும்)

---

★ லெனின் மிகவும் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்த காலத்தில் 1923-ல் எழுதிய தமது கடைசி நூல்களில் ஒன்று ''கூட்டுறவு பற்றி'' என்பதாகும். பாடுபடும் விவசாயப் பெருமக்களைக் கூட்டுறவின் மூலம் படிப்படியாக சோஷலிச அமைப்பில் ஈடுபடுத்துவதற்கும், விவசாயத்தை சோஷலிச மார்க்கத்தில் மாற்றியமைப்பதற்கும் இந்நூல் வழிகூறியது. இதுவே லெனின் கூட்டுறவுத் திட்டம் என்று பெயர் பெற்றது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றியதால் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. விவசாயத்தில் சோஷலிச முறை இடம் பெற்றது; பெரும் அளவான விவசாயத் தொழில் நிறுவனங்கள் — அதாவது கூட்டுப் பண்ணைகளும்—தோன்றின. அரசாங்கப் பண்ணைகளும் — இன்று சோவியத் யூனியனில் 36,200 கூட்டுப் பண்ணைகள் உள்ளன.

— கூட்டுறவு

# அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.ச.

சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தையொட்டி அளவெட்டி மல்லாகம் ப.நோ. கூ. சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சில விபரங்களை இங்கே தருகின்றோம்:

பதினொரு கிளைகளைக் கொண்டதாக இயங்கிவரும் இச்சங்கம் கடந்த நிதியாண்டில் ரூ. 54756/38 ஐ சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது.

நான்கு சிறுவர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. அளவெட்டியிலும் மல்லாகத்திலுமாக இரு கைத்தறி நிலையங்களை நடாத்தி வருகின்றது. ஒப்பந்த வேலைப்பகுதி மூலம் ஒப்பந்த வேலைகளையும் திறம்படச் செய்து வருகின்றது. கேல்வத்தைப் பாடசாலைக் கட்டிட ஒப்பந்த வேலையில் மாத்திரம் பொது மக்களின் நலன் கருதி ரூ. 4372/40க்கு மேலதிகமாக இச்சங்கம் வேலைசெய்துள்ளது என அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அளவெட்டி மல்லாகம் அபிவிருத்திச்சபைக்குத் தேவையான மூலதனத்தில் $\frac{1}{3}$ பகுதியை இச்சங்கம் கொடுத்துதவ ஒழுங்கு செய்துள்ளது.

விளைபொருட் பகுதி இச்சங்கத்தின் முக்கிய அம்சம் என அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. விவசாயக் கொடுகடன் வசதி, விதை உருளைக்கிழங்கு, பீற்றூட் விதை, அரசாங்க மானிய உரம் ஆகியவற்றைப் பெறவும் விளைபொருட்களை விற்பனை செய்யவும் விவசாயிகளுக்கு இச்சங்கம் உதவி வருகின்றது.

புடவை விற்பனை நிலையத்தில் பங்கீட்டுப் புடவைகளையும், பங்கீடில்லாத புடவைகளையும் சங்க கைத்தறி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளையும் விற்பனை செய்ததில் சுத்த இலாபமாக ரூ. 6720/50 ஐ இச்சங்கம் பெற்றுள்ளது,

கன்ரகப் பகுதி மூலம் ரூ. 4150/71 ஐ சுத்த இலாபமாகப் பெற்றுள்ளது.

(முற்றொடர்)

(திரு. G. குருகுல சூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்-தோற்றுவாயும் வளர்ச்சியும்

இக்குழு 5 கூட்டங்களை நடாத்தியது. இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 பேர் இவ்விசாரணைக் குழு முன் சாட்சியமளித்தனர். அவர்களில்பெரும்பாலோர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும், வர்க்க ரீதியாக நிலக்கிழார்களாகவும் இருந்தனர். உண்மையான விவசாயிகளோ அல்லது கிராமப்புற அரசாங்கச் சிற்றூழியரோ விசாரணைக்குழு முன்பு சாட்சியமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சாட்சியமளித்தவர்களில் ஏறக்குறைய எல்லோருமே நெல்லுற்பத்திக்குக் கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் உகந்தவை அல்ல என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

கூட்டுறவுக் கடன் உதவு சங்கங்கள் கிராமப்புறவாசிகளுக்கு அதிக நன்மை பயக்கும் என விவசாய வங்கிகள் குழு முடிவு செய்தது. இத்தகைய நிறுவனங்கள் இருப்பின் விவசாயி தனது விவசாயத் தேவைகளுக்கு நியாயமான வட்டி வீதத்தில் கடன்பெற முடியுமென்றும் தனது காணியிலே பணத்தை முதலீடு செய்வதற்கு (உரமிடுதல், திருந்திய விவசாய இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துதல் போன்றவை) இது ஒரு தூண்டுதலாக இருக்குமென்றும் முதலீட்டிற்கேற்ப நல்ல விளைச்சல் பெறமுடியுமென்றும் குழு சுட்டிக்காட்டியது. இக்குழு மேலும் கூறியதாவது: கூட்டுறவுக் கடனுதவு சங்கங்களை நிறுவுவதில் பல சிக்கல்கள் உள. வெளி உதவியின்றி விவசாயிகள் தாமாகவே சங்கங்களை நிறுவுவர் என எதிர்பார்க்க முடியாது. கூட்டுறவுக்கொள்கையை விவசாயிகள் புரியவில்லை. எனவே ஒரு தூண்டுகை தேவைப்படுகின்றது. இந்தியாவிலே 1904ல் இயற்றப்பட்ட கடனுதவு சங்கங்களின் சட்டம்போன்று இங்

கும் இயற்றப்பட வேண்டும் என நாம் தகவுரை செய்கின்றோம். கட்டளைச்சட்டம் இயற்றப்படுவது மட்டும் போதாதாகிலும் இவ்வாறு சட்டம் இயற்றப்படின் சங்கங்கள் நிறுவப்படும்போது அவற்றினைப் பதிவு செய்யலாம். விதானையார் போன்றோரின் முயற்சியினால் வேறு சங்கங்களை நிறுவலாம். இச்சங்கங்களை அமைப்பதற்குத் தூண்டுதலும் உற்சாகமும் அளிக்கப்படவேண்டும். தும்பறை, தெளியாவலை சங்கங்களைப் பொறுத்தவரை இலங்கை விவசாயச் சங்கத்தின் நடவடிக்கைகளே அவற்றிற்கு வழிவகுத்தன. இலங்கை விவசாயச் சங்கத்தின் கிளைகளைப்பற்றியே அவைதோன்றின. அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் விதானைமார் போன்றோர் உற்சாகமளித்தல் இன்றியமையாதது. வெளியாருடைய தூண்டுதல் இல்லாவிடின் மக்கள் ஒன்றும் செய்யாதுவாழாவிருப்பது திண்ணம்.

அரசின் நிதியுதவிபற்றிக் குறிப்பிடும்போது இயன்றளவு அரசாங்க நிதியுதவி தவிர்க்கப்படல் வேண்டுமென குழு கருதியது. நிதியுதவியை அரசாங்கம் வழங்கினால் சங்கங்களை அரசாங்க திணைக்களங்களாக உறுப்பினர்கள் கருதுவதோடு சங்கங்களைத் தாமாகக் கட்டுப்படுத்த உறுப்பினர்கள் ஒருபோதும் கற்கமாட்டார்கள் என குழு அஞ்சியது. ஆரம்பச்சங்கங்களுக்கு வெளியுதவி கட்டாயமாகத் தேவைப்படும் என்றும் இதனைக் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையும் அனுதாபமும் உள்ள தனிப்பட்ட வைப்பாளரிடமிருந்தே பெறவேண்டுமென்றும் குழு கருதிற்று. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிதிரட்டுமுகமாக நெல்லுக்கான வரியை மீண்டும் அறவிடுவது உசிதமற்றது என இக்குழு முடிவு செய்தது

சங்கங்களின் கணக்குகளை அரசாங்கம் பரிசோதிக்க வேண்டுமென்று குழு தகவுரை செய்தது. இலங்கை விவசாயச்சங்கச் செயலாளருக்கு அல்லது இதற்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சங்கத்தைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் குழு கூறிற்று. தும்பறை கூட்டுறவுச்சங்கத்தின் அல்லது வங்காளச்சங்கங்களின் உபவிதிகளைப்போன்று இந்த உத்தேச சங்கங்களின் உபவிதிகள் அமைதல் வேண்

டும் என்றும் இக்குழு மேலும் கூறிற்று.

கூட்டுறவுக் கடனுதவு சங்கங்களை நிறுவுவதில் காரியாதிகாரிகளும் இலங்கை விவசாயச்சங்கங்களின் கிளைகளும் உதவ முன்வரவேண்டுமென குழுவற்புறுத்திற்று. இந்தியச் சங்கங்களுக்கு இந்திய கட்டளைச்சட்டம் வழங்கிய அதே சலுகைகளை இங்குள்ள சங்கங்களுக்கு வழங்கவேண்டுமென இலங்கை அரசை இக்குழு வேண்டியுள்ளது. சங்கங்கள் தாமாகவே நிதிதிரட்டியபின்பு அவற்றிற்கு அரசாங்கம் ஓரளவு நிதியுதவி வழங்கலாம் என்றும் அரசாங்க நன்கொடை ரூ 500க்கு மேற்படாததாய் இருத்தல் வேண்டும் என்றும் சங்கங்களின் நிருவாகக்குழுக்கள் உறுப்பினர்களாலேயே தெரிவு செய்யப்படல் வேண்டும் என்றும் குழு மேலும் ஆலோசனை கூறிற்று.

விவசாய வங்கிகள் குழுவின் அறிக்கை இலங்கை ஆள்பதிக்கு 1910ல் சமர்ப்பிக்கப்பட்டது, ஏப்ரல் மாதம் 12ந் திகதி 1911ல் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென ஒருபிரேரணை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. ஏப்ரல் 24ந் திகதி இம்முறியின் இரண்டாம் வாசிப்பின்போது ஆள்பதி உரையாற்றும் போது எக்காரணம்கொண்டும் அரசு வட்டிக்குப்பணம் கொடுப்பவர்களின் இடத்தைப் பிடிக்கலாகாதெனக் குறிப்பிட்டார். விவசாய வங்கிகள் குழுவின் அறிக்கை பற்றி அரசாங்க அதிபர்களின் குறிப்புரைகள் கோரப்பட்டதாகவும் நடைமுறையில் தகவுரைகள் வெற்றி பெறுவதுஐயத்திற்கிடமாய் இருந்தபோதிலும் குழுவின் முடிவுகளுக்குத் தாம் உடன்படுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்திருப்பதாக ஆள்பதி மேலும் கூறினர். மூன்றும்முறையாகவும் முறி வாசிக்கப்பட்டு மே மாதம் 1911ல் நிறைவேற்றப்பட்டது.

**நாடுதோறும் இயக்கத்தை விரிவடையச் செய்தல் 1911-1930**

1911-ல் நிறைவேற்றப்பட்ட கூட்டுறவுச் சங்கச் சட்டம் உற்சாகமளித்த போதிலும் ஆர்வமற்ற பொதுமக்களின் மனங்களிலே கூட்டுறவுக் கோட்பாட்டை வேரூன்றச் செய்வது கடினமாய் இருந்தது. ''எமதுபணி இருவகைத்தானது. நாம்தேவையைஉண்டு

பண்ண வேண்டும். அதே சமயம் அத்தேவையை நிரப்பவும் வேண்டும்'' என ஏப்ரல் 1914-ல் கூட்டுறவுச் சங்கப் பதிவுகாரியஸ்தர் குறிப்பிட்டார்.

1913 பெப்ரவரி நடுப் பகுதியிலிருந்து விவசாய ஆணையாளர் தனது வழக்கமான கடமைகளுடன், கூட்டுறவுச் சங்கப் பதிவு காரியஸ்தராகவும் கடமையாற்றினர். இலங்கை விவசாயச் சங்கமும், தன் விவசாயப் போதனசிரியரும் கூட்டுறவுத்தத்துவத்தை கிராமவாசிகளுக்குப் போதிப்பதில் ஈடுபட்டனர். எனினும், தொடக்கத்திலே வளர்ச்சி மிகவும் மந்தமாகவே இருந்தது. 1913 மார்ச் மாத இறுதியில் மூன்று சங்கங்கள் மட்டுமே பதியப்பட்டிருந்தன. அவை யாவும் தென்மாகாணத்தில் உள்ள சங்கங்கள். முதலாவதாகப் பதியப்பட்ட சங்கம் என்ற பெருமை வெல்லபோதபத்து சங்கத்தையே சாரும்.

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் முதலாவது வளர்ச்சிப்படி கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து 1930-ல் தனிவேருன திணைக்களம் கூட்டுறவுத் நிறுவப்பட்டது வரை எனலாம். அதாவது பொதுவாகக் கூறுவதென்ருல் இவ்வளர்ச்சிப் படியின் காலஎல்லை 1914-ல் இருந்து 1931 வரை எனலாம்.

இக்காலகட்டத்தில் பல முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்க நிதி வழங்கும் பொருட்டு உள்ளூர் கடன் வசதி, அபிவிருத்தி நிதி ஒன்று உருவாக்கப்பட்டது. கூட்டுறவுச் சட்டம் 1921-ல் திருத்தப்பட்டது. 1914, 1919, 1929ல் மூன்று அகில இலங்கைக் கூட்டுறவு மகாநாடுகள் நடாத்தப்பட்டன. கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 1924 இறுதியில் திரு. W. K. H. கம்பெல் நியமிக்கப்பட்டார். வெளிநாடுசென்று பயிற்சிபெற்ற பின்பு 1926-ல் அவர் கூட்டுப்பதிவுக் காரியஸ்தராக நியமனம் பெற்ருர். அன்றிலிருந்து இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றிலே கம்பெல் ஊழி ஆரம்பமாகியதெனலாம். அது வரை விவசாய ஆணையாளர் திரு. ஸ்ரொக்டேல் அவர்களே இயக்கத்தின் வழிகாட்டியாக இருந்தார்.

1914 மார்ச் இறுதியில் எல்லாமாக 35 சங்கங்கள்

இருந்தன. இவற்றில் 8 தென் மாகாணத்திலும், 7 வடமாகாணத்திலும், 5 மத்திய மாகாணத்திலும் நிறுவப்பட்டிருந்தன. சங்கங்கள் பதியப்படமுன்பு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியோ அல்லது என்ன வகையான சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது பற்றியோ திட்டவட்டமான கொள்கைகள் அப்பொழுது வகுக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக ஒரு சங்கம் பங்கு முதல் இன்றி வைப்புப் பணங்களைக் கொண்டுஇயங்குவதற்கு உத்தேசித்திருந்தது. ஊவாச் சங்கத்தின் தொழிற்பரப்பு உவாமாகாணம் முழுவதையும் (அதாவது 3271 சதுர மைல்களை) உள்ளடக்கியிருந்தது. தம்பன்கடுவ சங்கம் பதியப்பட்டபின்புதான் அதன் பணங்களைப் பாதுகாப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை என்று கண்டு பிடிக்கப்பட்டது. நாற்பது மைல்களுக்கு அப்பாலே தான் அதற்கு மிக அண்மையிலுள்ள அஞ்சல் நிலையம் இருந்தது. பல சங்கங்கள் பதியப்பட்ட பின்பு இயங்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

1915 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 54 சங்கங்கள் பதியப்பட்டிருந்தன. இவற்றில் 12 மேற்கு மாகாணத்திலும்10மத்திய மாகாணத்திலும், 10 வடமாகாணத்திலும், 9 தெற்கு மாகாணத்திலும் இருந்தன. 1930 ஏப்ரல் மாத இறுதியில் இந்த 54 சங்கங்களில் ஆக 6 சங்கங்கள் தான் இயங்கிக் கொண்டிருந்தன.

முதலாம் உலகப்போர் மூண்டதும் அரசாங்கம் தவிர்க்க முடியாது செலவுச் சுருக்கங்களைக் கையாள வேண்டியிருந்ததனால் இந்தக்கால கட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது. மேலும் 1915 இல் ஏற்பட்ட இனக் கலவரமும் வளர்ச்சிக்குக் குந்தகமாய் இருந்தது. 1915க்கும் 16 க்குமிடையில் ஒரேயொரு சங்கம் தான் பதியப்பட்டது. இனக் கலவரம் ஏற்பட்ட பகுதிகளில் இருந்த சங்கங்கள் இயங்க முடியாது போய் விட்டன. அவை மீண்டும் 1917 முற்பகுதியில்தான் இயங்கத் தொடங்கின. கடன்கள் அறவிடப்படாதிருந்தன. இனக்கலவரத்தால் ஏற்பட்ட நட்டங்களுக்கு ஈடாக அரசாங்கம் அறவிட்ட கட்டணங்களும் இயக்கத்தின் வளர்ச்சியை மேலும் பாதித்தன.

1921 ல் கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் பயனாக கடனுதவு சங்கங்கள் அல்லாத கூட்டுறவுச் சங்கங்களும் இரண்டாம் மட்ட சங்கங்களும் நிறுவப்படுவது சாத்தியமாயிற்று. 1924 ல் கொழும்பு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் நிறுவப்பட்டது. இதுவே முதன் முதல் நிறுவப்பட்ட மேற்பார்வை ஒன்றியமாகும். 1929 இல் யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கி நிறுவப்பட்டது. இதுவே முதன் முதல் நிறுவப்பட்ட கூட்டுறவு வங்கியாகும். முதன் முதல் நிறுவப்பட்ட பெண்கள் கூட்டுறவுச் சங்கம் காலி குலங்கான சங்கமாகும். 1930 ஏப்ரல் இறுதியில் 9 கூட்டுறவு மேற்பார்வை ஒன்றியங்கள் நிறுவப்பட்டிருந்தன. அப்பொழுது மொத்தமாக 459 சங்கங்கள் இருந்தன. உறுப்பினர்களின் மொத்தத் தொகை 22416; செலுத்தப்பட்ட பங்கு முதல் ரூ. 47123/- இச்சங்கங்களில் பல விவசாயச் சங்கங்களாயிருந்தன. எல்லாச் சங்கங்களினதும் காலங்கடந்த கடன்களின் மொத்தத் தொகை ஏறக்குறைய 10 இலட்சம் ரூபாவாகும்.

விவசாயச் சங்கங்கள் அல்லாத கூட்டுறவுச்சங்கங்கள் பல்வேறு வகைப்பட்டிருந்தன. பெரும்பாலானவை சிக்கன, சேமிப்புச் சங்கங்களாய் இருந்தன. சிலபாடசாலைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. எடுத்துக்காட்டாக யாழ் இந்துக்கல்லூரி கண்டி டிறினிற்றிக் கல்லூரி, உடுவில் பெண்ககள் கல்லூரி, ஆகியவற்றில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. வடமாகாணத்திலும், (பூநகரியில்) கிழக்கு மாகாணத்திலும் நெல்லுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இவை தமது உறுப்பினர்களுக்கு பணத்திற்குப்பதிலாக நெல்லைக் கடனாக வழங்கின. எனினும், இத்தகைய சங்கம் அவ்வளவு எடுபடவில்லை. முகத்துவாரத்தில், கொழும்பு வடக்கு கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் நிறுவப்பட்டது. இதுவே முதன் முதல் நிறுவப்பட்ட கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் இது நீண்ட நாள் உயிர் வாழவில்லை. 1930 ஏப்ரல் இறுதியில் 690 சங்கங்கள் பதியப்பட்டிருந்தன, எனினும், ஆரம்பத்தில் பதியப்பட்ட சங்கங்கள் பல இயங்காதிருந்தன. இக்கால எல்லையில்

231 சங்கங்கள் பதிவு செயயப்பட்டன.

1914 ஏப்ரல் 28 ல் முதலாவது அகில இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் மகாநாடு கண்டியில் நடைபெற்றது. அதிக விளம்பரத்தோடு நடாத்தப்பட்ட இம்மகாநாட்டிற்கு இலங்கை ஆளுநர் சேர் றெூபேர்ட் சாமர்ஸ் தலைமை தாங்கினூர். கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளைத் தவிர பல உத்தியோகத்தரும் பிரமுகர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர். நீர்ப்பாசனம், வயல் வேலைகள் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவும் வழக்கத்தைப் பாராட்டிய ஆளுநர் இத்தகைய ஒத்துழைப்பு முதலினை ஒன்றுதிரட்டுவதில் இல்லாமை குறித்து வருத்தம் தெரிவித்தார். ஏழைக்கு கடன் வழங்கப்படுவதில்லை, கடன் வழங்கப்படாததினுல் அவன் தொடர்ந்தும் ஏழையாக இருக்கிறுன் என அவர் சுட்டிக்காட்டினூர். முதலினை திரட்டுவதற்குக் கூட்டுறவாளர் முனைய வேண்டும் என அறிவுறித்தினூர். அடுத்து உரையாற்றிய கூட்டுறவுச் சங்கப் பதிவு காரியஸ்தர் கூறியதாவது: ''இப்பொழுது கடனுதவு சங்கங்களுக்கு அதிகதேவை ஏற்பட்டிருப்பதாகக் கூற முடியாது. ஒளிவு மறைவின்றி இதனை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இச்சங்கங்கள் எந்த வர்க்கத்திற்கு உதவி செய்ய இருக்கின்றனவோ அந்த வர்க்கம் புதிய மாற்றங்களில் நாட்டங்கொள்வதில்லை. சங்கங்கள் எதற்காக நிறுவப்படுகின்றன என்பதைப்பற்றி திட்டவட்டமான விளக்கம் இல்லாது சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவை நிறுவப்பட்டபின் எவ்வாறு இயங்க வேண்டும் என்பது பற்றித் தெளிவில்லை.''

இம்மகாநாட்டில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் மட்டுமே கூட்டுறவுக் கடனுதவி என்ற பதத்தினைக் கையாளலாம் எனச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாவது அகில இலங்கைக் கூட்டுறவு மகாநாடு 1919-ல் ஜூலை 2-ந் திகதி கொழும்பில் நடைபெற்றது. கூட்டுறவு இயக்கம் கைத்தொழிற் துறையையும் உள்ளடக்கவேண்டும் என்ற தீர்மானம் இம்மகாநாட்டில் நிறைவேற்

றப்பட்டது. மூடிக்குரிய காணி சங்கங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவு ஊழியருக்கு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இரண்டாம் மட்டச்சங்கங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும், அரசாங்கம் சங்கங்களின் பங்கு முதலுக்கு நிதிவழங்கவேண்டும் என்றும் பதிவு காரியஸ்தரின் ஆண்டறிக்கை மக்களின் மொழிகளாகிய தமிழிலும், சிங்களத்திலும் வெளியிடப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மூன்றாவது அகில இலங்கைக் கூட்டுறவு மகாநாடு கண்டியில் 1929 ஒகஸ்டடில் நடைபெற்றது.

எவ்வாறு மக்களிடையே செல்வாக்கைப் பெறுவது என்பதுதான் ஆரம்பக் கூட்டுறவு இயக்கத்தின் பிரச்சினையாகும். அக்கால கட்டத்தில் உத்தியோகத்தர்களின் கையே ஓங்கியிருந்தது. கிராமப்புற வாசிகள் பாராமுகமாய் இருந்தனர். பொருளாதாரத்துறையில் தோட்டத்துரைமார்களாகிய ஐரோப்பியரின் கைகளே ஓங்கியிருந்தன. எனவே கூட்டுறவு இயக்கத்தினை ஊக்குவிக்கும் பொறுப்பு உத்தியோகத்தர்களையே சார்ந்திருந்தது. கல்வி கற்றவர்களும், வசதிபடைத்தவர்களும் கூட்டுறவு இயக்கத்திற்கு உதவவேண்டும் என உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்தனர். எனினும் 'பெரும்புள்ளிகளின்' ஒத்துழைப்பு போதியளவு கிடைக்கவில்லை என உத்தியோகத்தர் வருத்தம் தெரிவித்தனர். ஆயினும், தொடக்கத்திலிருந்தே சுதந்திரமான இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்பதே குறிக்கோளாய் இருந்தது. அரசாங்கக் கட்டுப்பாடு எதுவுமின்றி மக்களே தமது சங்கங்களை நடாத்த வேண்டும் என்பதே குறிக்கோளாய் இருந்தது. சங்கங்களைப் பதிவுசெயதல், சங்கங்களுக்கு ஆலோசனை வழங்குதல், பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், கணக்குகளைப் பரிசோதனை செய்தல், தேவை ஏற்படின் சங்கங்களின் பதிவை அழித்தல் ஆகியவையே பதிவு காரியஸ்தரினதும் அவரது உதவியாளரினதும் கடமையாய் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது.

(வளரும்)

# "பாவனையாளர் கூட்டுறவு அபிவிருத்தி" என்பது குறித்து நடைபெற்ற தேசீய ஆய்வு வகுப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

(1) பாவனையாளரின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதே நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் குறிக்கோளாகும்.

(2) இன்றைய சூழ்நிலையில் இச்சங்கங்கள் விற்பனைக் கொள்கையைச் செயற்படுத்தி நாடு முழுவதிலும் விநியோகத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். இது ஓர் இடைக்கால நிலைமையே. பொது வியாபாரத்தில் சங்கங்கள் ஈடுபட்டு போட்டி நிறைந்த ஒரு சூழ்நிலையில் நுகர்ச்சியாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

(3) கூட்டுறவுக் கடைகளிலே 'கியூ' வரிசைகளைக் குறைப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்:

1. உணவு ஆணையாளரின் ஒப்புதலுடன் பங்கீட்டுப் பதிவேடுகளை நீக்கி பங்கீட்டு முறையை எளிதாக்குதல்.

2. சில ரொக்கச்சிட்டைகளில் பங்கீட்டுப் பொருள்களின் பெயர்களை அச்சிடுதல். இவ்வாறு அச்சிடப்பட்ட ரொக்கச் சிட்டைகளில் பங்கீட்டு அட்டைக்குரியவரின் இலக்கத்தையும், ஒவ்வொரு பொருளின் மொத்த விலையையும் மாத்திரமே எழுதுதல்.

3. கூப்பனைப் பெறுதல், பங்கீட்டு அட்டைகளில் எழுதுதல், ரொக்கச் சிட்டைகளில் எழுதுதல், காசைப்பெறுதல் ஆகியவற்றை ஒருவரே செய்தால் வாடிக்கையாளருக்குச் சேவையாற்றுவதற்கு முன்பு ஒருவர் இருந்த இடத்தில் இப்போது மூன்று ஊழியர்கள் இருப்பார்கள்.

(4) 1. கூடுதலான தராசுகளை உபயோகித்தல், நிறுப்பவர்களின் தொகையையும் கூட்டுதல்.

2. துரிதமாக வேலை செய்ய இயலாதவர்களைப்பங்கீட்டுப் பொருள்களை வழங்குதலிலிருந்து விலக்கி, அவர்களுக்கு வேறு வேலைகளைக் கொடுத்தல்.

3. திங்கட்கிழமையன்று வேலை நேரத்தைக் கூட்டுதல்.

4. தேவையற்ற மேசைகள், உதிரிப் பொருள்கள் போன்றவற்றை அகற்றி தளபாடங்களை நன்கு ஒழுங்குபடுத்திகூடிய இடவசதிகளை ஏற்படுத்துதல். 'கியூ' வரிசையில் நிற்கும் வாடிக்கையாளருக்கு வெய்யில், மழைக்குப் பாதுகாப்பளித்தல். அவர்கள் இருப்பதற்கு வாங்குகளை இடுதல்.

(5) இப்பொழுது நடைமுறையிலுள்ள பங்கீட்டுமுறை தற்காலிகமானதாய் இருப்பதனால் புதிய கடைகளைத் திறப்பதில் சங்கங்கள் மிக அவதானமாய் இருத்தல் வேண்டும். பங்கீட்டு முறை கைவிடப்பட்டாலும் ஒரு கடை தேவைப்படும் எனக் கருதினால் மட்டும் தான்சங்கம்ஒரு புதிய கடையைத் திறக்க வேண்டும். இயன்ற அளவு சங்கங்கள் அரசாங்கத்திடமிருந்து காணிகளைப் பெற்று குறைந்த செலவில் தற்காலிக கட்டிடங்களை அமைக்கலாம்.

(6) ஒவ்வொரு கடையிலும் பங்கீட்டு அல்லது தட்டுப்பாட்டுப் பொருள்கள் பற்றிய தகவல்கள், அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திகதிகள் கடைதிறந்திருக்கப்படும் நாட்கள் ஆகிய செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகள் அல்லது கரும் பலகைகளை ஒவ்வொரு கடையிலும் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும்.

(7) பங்கீட்டுப் பொருள் வியாபாரம் தற்காலிகமான ஒன்றாய் இருப்பதனால் அதன் அடிப்படையில் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க முடியாது. ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு வியாபாரங்களில் ஈடுபட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விழையவேண்டும். விற்பனையாளருக்கு விசேட பயிற்சிகளை அளித்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் எதிர்காலத்தின் சவால்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இவ்வாறு வியாபாரத்தைப் பல்வகைப்படுத்தும்போது கடையின் ஒழுங்கமைப்பு, பொருள்களை ஒழுங்குபடுத்தும் முறை, பணத்தைச் செலுத்தும்

முறை ஆகியவற்றில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். வாடிக்கையாளர் விற்பனை இடத்திற்குச் சென்றுவேண்டிய பொருள்களைப் பெற்று விற்பனையாளர்களிடமே பணத்தைச் செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(8) விற்பனையாளருக்கு விற்பனையோடு தொடர்பற்ற வேறு வேலைகளைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் விற்பனையில் தமது முழுக் கவனத்தையும் செலுத்துவார்கள்.

(9) நெறியாளர் குழு அல்லது பொது முகாமையாளரிடம் அதிகாரம் குவிந்திருப்பதனுல் நிறுவன வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. இரண்டாம் மட்ட மூன்ரும் மட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டால், நெறியாளர் குழு / பொது முகாமையாளர் தமது நேரத்தைத் திட்டமிடலுக்குச் செலவிடலாம். இவ்வாறு அதிகாரம் கையளிக்கப்பட்டால்தான் நிறுவனம் வளர்ச்சியடைய முடியும்.

(10) வியாபார வளர்ச்சியைச் சீர்படுத்துவதென்ருல் முகாமைக்கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். ஒரு மாதிரி முதலீடு அமைப்பை உருவாக்கினுல் அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் முதலீடுகளைச் செய்யலாம். இம்மாதிரி அமைப்பைப் பயன்படுத்தி கொள்வனவுகளையும் ஒழுங்குபடுத்தலாம். இவ்வாறு செய்தால் பொருள்கள் விற்பனையாகாது கடையில் குவிவதைத் தடுக்கலாம்.

(11) காசுக்கட்டுப்பாடு சங்கமட்டத்திலும், கடைமட்டத்திலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். கடைமட்டத்தில் தேவையான படிவங்களை (படிவம் 1 தொடக்கம் படிவம் 11 வரை) ஒழுங்காக நிரப்புவதன் மூலம் காசுக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கலாம். கிளைகளில் சேரும் காசை சேகரிப்பதுபற்றி கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. காசைக் கட்டுவதற்காகக் கடைமுகாமையாளர் தலைமை அலுவலகத்திற்கு இப்பொழுது செல்வதைத் தவிர்க்கவேண்டும் என்று பலர் கருதுகின்றனர். நடமாடும் காசாளர் முறையைப் புகுத்தலாம். ஆனுல், கிளைகள் மிகத்தொலைவில் இருந்தால் இம்முறையைக் கையாள்வதனுல் பெருஞ் செலவு ஏற்படும். கிளை முகாமையாளரே தலைமை

அலுவலகத்திற்குக் காசைக் கொண்டு செல்வதைவிட வேறுவழி இல்லாவிடின் அவ்வாறு செல்வதை வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரு முறையாகக் கட்டுப்படுத்தலாம். தலைமை அலுவலகத்தில் இயன்ற அளவு எல்லாச்செலவினங்களையும் காசோலைமூலமே செய்தல் வேண்டும். பணியாளர், இடவசதி, கையிருப்பு ஆகியவற்றைப்பற்றி முகாமைப் பயன் முனைப்பான கட்டுப்பாட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். நாளாந்த விற்பனை விகிதத்தை நாட்டின் சராசரியுடன் ஒப்பிடல் வேண்டும். இதற்கு வேண்டிய புள்ளி விபரங்களை உச்ச நிறுவனம் கொடுத்துதவக் கூடிய நிலை ஏற்படும்வரை கூட்டுறவுத் திணைக்களமே அவற்றினைக் கொடுத்துதவ வேண்டும். வியாபாரப் போக்குகளை அறிந்திருப்பது இன்றியமையாதது. சங்கத்தின் விற்பனவு, செலவினங்கள் ஆகியவைபற்றி வரைபடங்களையும், மாதிரிப் படங்களையும் தயாரித்து வைத்திருப்பது இதற்கு உதவியாய் இருக்கும்.

(12) பெறுமானக் கட்டுப்பாட்டு முறை கையாளப்பட்டுவரினும் நடைமுறையில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. விதிக்கப்பட்ட விலையைவிட விற்பனையாளர் கூடுதலான விலையை அறவிடுதல் போன்ற 'ஓட்டை ஒடிசல்களை' அடைப்பதற்குப் பயன் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். திடீர்ப் பரிசோதனைகள் போன்ற நடவடிக்கைகள் இதற்கு உதவலாம். பொருள் இருப்பிற்குக் கடைமுகாமையாளரே பொறுப்பாய் இருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையாவது கையிருப்புப் பரிசோதனை நடாத்தப்படல் வேண்டும். இதனை ஓர் ஓய்வு நாளில் செய்யலாம். மேலும், இப்பரிசோதனை ஒரு நாளுக்குள்ளே முடிக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றினை விற்பனை செய்யும்போது சோர்வுகள் ஏற்படுவது இயல்பு. இயற்கைக்காரணங்களாலும், வாடிக்கையாளர், பணியாளர் முதலியோர் மோசடி செய்வதாலும் சோர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் இவற்றினை நாம் மனதில் கொள்ள வேண்டும். சோர்வுகளை வரையளவுபடுத்தி முன்கூட்டியே சோர்வு எல்லைகளை

வரையறுத்தால் சோர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் முகாமை வேண்டிய தீர்மானங்களை எடுக்க ஏதுவாக இருக்கும்.

(13) வியாபாரத்தைப் பல்வேறுபடுத்துவதற்கும், இயக்கத்தைப்பற்றி ஒரு புதிய எண்ணத்தை நிலைநாட்டுவதற்கும், பணியாளருக்கு ஒரு விசேட பயிற்சியளித்தல் இன்றியமையாதது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் கூட்டுறவுப் பணியாளரின் பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. திறமை வாய்ந்த பணியாளரைக் கூட்டுறவு இயக்கம் கவரவேண்டுமாயின் செம்மையான நடைமுறைப்பிரமாணங்களையும், செம்மையான வேலைச் சூழலையும், சேவை நிபந்தனைகளையும் உருவாக்குதல் வேண்டும், பயிற்சி தொடர்ச்சியான ஒன்று என்பதை நாம் மறத்தலாகாது. தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதென்றல் பணியாளருக்கு அனுபவம் மட்டும் போதாது. பயிற்சி அளிப்பதற்கான நிறுவன ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும். தபால்மூலம் பயிற்சி அளிப்பது பற்றியும் ஆராயலாம். பணியாளரின் திறமைகளைக் கூர்மைபடுத்துவதற்கு அவர்கள் சேவையில் இருக்கும்போதே பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டும். அத்துடன் நடைமுறைப் பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் நடைமுறைப்பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும். உச்ச நிறுவனம் இத்தகைய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளக் கூடிய நிலை உருவாகும்வரை உயர்மட்ட முகாமையாளருக்கும் விற்பனையாளருக்கும் பயிற்சி அளிக்கும் திட்டங்களைக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(14) நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைச் செம்மையாக வளர்ப்பதென்றல் பலம்பொருந்திய ஒரு தேசீய உச்ச நிறுவனத்தைப் படிப்படியாக வளர்த்தல் வேண்டும். இத்தேசீய உச்ச நிறுவனமே கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய பொருள்களை உள்ளூரில் கொள்வனவு செய்தும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தும் தேவை ஏற்படின் பதனிடும் நிலையங்களையும், தொழிற்சாலைகளையும் நிறுவும்.

பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதிலும், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதிலும் ஏற்படும் செலவினங்களைக் குறைப்பதற்கு விஞ்ஞான அடிப்படையில்பிராந்திய களஞ்சியசாலைகளை அமைத்தல் வேண்டும். இத்தகைய களஞ்சியசாலைகளை அமைக்கும்போது நாட்டின் நிருவாக மாவட்ட எல்லைகளை அல்ல, வியாபார நலன்களையே முக்கியமாக நாம் கருத்திற்கொள்ள வேண்டும். உற்பத்தி நிலையம், தொழிற்சாலை, துறைமுகம் ஆகியவற்றிலிருந்து இயன்றளவு குறைந்த தூரத்தில் பிராந்திய களஞ்சியசாலைகளும், கடைகளும் இருக்கக்கூடிய வகையில் பிராந்திய களஞ்சியசாலைகளை அமைத்தல் சாலச் சிறந்தது. போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கும்பொருட்டும், பொருள்கள் ஒழுங்காக வழங்கீடு செய்யப்படுவதற்கும் மையப்படுத்தப்பட்ட ஓரிடத்திலிருந்து லொறிகள்மூலம் ஒரு பகுதியிலுள்ள கடைகள் பலவற்றிற்குப் பொருள்களை அனுப்பக்கூடிய முறை மேற்கொள்ளப்படல் வேண்டும். எனவே, பொது முகாமையாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் சங்கத்தின் களஞ்சியத்திற்குச் செல்லும் இன்றைய நடைமுறை கைவிடப்படல் வேண்டும். புதிய முறையின்படி குறிப்பிட்ட நாட்களில் பொருள்கள் ஒழுங்காக வழங்கீடு செய்யப்படுமாதலால் சங்கம் களஞ்சியங்களைவைத்திருக்க வேண்டிய நிலை தேவையற்றதாய்விடும். உணவு ஆணையாளரின் களஞ்சியசாலைகளிலிருந்து பொருள்களைக் கடைகளுக்கு நேரடியாகக் கொண்டு செல்வதற்குச் சங்கங்கள் விசேட ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். இலங்கை முழுவதற்கும் வேண்டிய பிராந்திய களஞ்சியசாலைகளின் தொகைபற்றி (5-10) நுணுகி ஆராய்தல் வேண்டும்.

தேசீய உச்ச நிறுவனம் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(அ) சில்லறை வியாபாரம் பற்றி புள்ளி விபரங்களைச் சேகரித்து ஆராய்ச்சிகளை நடாத்துதல்.

(ஆ) சில்லறை விற்பனை, முகாமை உத்திகள், கணக்கியல்பற்றி ஆலோசனைகளை வழங்குதல்.

(இ) புதிய கடைகளை நிறுவுதல் அல்லது பழைய கடை

களை மறுசீரமைத்தல் பற்றிச் சங்கங்களுக்கு வழி காட்டுதல்.

(ஈ) பணியாளருக்குப்பயிற்சி அளித்தல், முகாமையாளர் பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல்.

(உ) விளம்பர, விற்பனை இயக்கங்களை நடாத்துதல்.

உச்ச நிறுவனத்திற்கும் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும். சங்கங்களே, உச்ச நிறுவனத்தின் உரிமையாளராய் இருக்கும். சங்கங்கள் உச்ச நிறுவனத்தில் பங்குகளைப்பெற்று, உச்ச நிறுவனத்தின் நெறியாளர்குழு முழுவதையும் தெரிவு செய்யும். ஒவ்வொரு பிராந்திய களஞ்சியசாலைக்கும், அக்களஞ்சியசாலையோடு இணைக்கப்பட்ட சங்கங்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு வழிகாட்டும்.

விவசாயம், சந்தைப்படுத்துதல், உற்பத்தி, நுகர்ச்சி வியாபாரம் ஆகியவற்றை இணைக்கும்பொருட்டு தேசிய கூட்டுறவுச்சமாசங்கள் சிலவற்றை ஒருங்கிணைத்தல் வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். எனினும், இது பற்றி இறுதி முடிவு எடுக்க முன்பு சங்கங்களினதும், பணியாளர்களினதும், கூட்டுறவு ஆக்க ஆணையாளரினதும் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு குழு இதுபற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கையை இச்சங்கங்கள் ஆராய்ந்து தமது கருத்தைத் தெரிவித்தபின்புதான் இறுதி முடிவு எடுக்கப்படல் வேண்டும்.

(15) சங்கங்கள் நுகர்ச்சியாளருக்கு ஆற்றிவரும் சேவைகளை விருத்தி செய்வதற்குவேண்டியபணத்தை பின்வரும் முறைகளில் பெறலாம்:

1. அரசின் உதவி
2. மக்கள் வங்கியின் உதவி
3. சங்கங்களே தமக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்தல்

அரசு சங்கங்களின் பங்கு முதலுக்கு உதவலாம். இன்றியமையாத பொருள்களை விநியோகிப்பதற்குச் சங்கங்கள் வங்கியிடமிருந்துபெற்ற கடனுக்கான வட்டியில் ஒரு பகுதியை அரசு பொறுப்பேற்கலாம். குறைந்த வட்டியில் சங்கங்களுக்கு அரசு கடன்களை வழங்கி அவற்றினை நீண்ட கால அடிப்படையில் அறவிடலாம். பற்றுவரி, வியாபாரவரிகளிலிருந்து ஆகக்குறைந்தது 5 வருடங்களுக்காவது கூட்

டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்கலாம்.

நுகர்ச்சி வியாபாரத்திற்கு மக்கள் வங்கி இப்பொழுது கொடுத்துவரும் 25 வீத மேலதிகபற்றை 50 வீதமாக உயர்த்தினுல்தான் கூட்டுறவுச்சங்கங்கள் பயன் முனைப்பான முறையில் சேவையாற்றலாம்.

வெளியாட்களிடமிருந்து பணத்தைப் பெறுவதிலும் பார்க்க கூட்டுறவுச்சங்கங்கள் தமக்கு வேண்டிய பணத்தைத் தாமே சேகரித்தல் வேண்டும். புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன்மூலமும், பங்குமுதலை அதிகரிப்பதன்மூலமும் வெவ்வேறு தலைப்புக்களிலே சட்டமுறையான ஒதுக்கீடுகளை உருவாக்குவதன் மூலமும், கவர்ச்சிகரமான வட்டிவீதங்களைக்கொடுப்பதன்மூலமும் உறுப்பினர்களுக்குச் செல்லவேண்டிய ஆதரவுப் பணங்களை மேலதிக பங்குகளாகவும், புதிய பங்குகளாகவும் மாற்றுவதன்மூலமும் சங்கங்கள் தமக்கு வேண்டிய பணவளத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

### (16) குடியாட்சிப் பாங்கான கட்டுப்பாடு

உறுப்பினர் கூட்டுறவு இயக்கத்தில் நேரடியாகப் பங்குபற்றுதல் இன்றியமையாதது. கிளைக்குழுத்தேர்தல்கள் இதற்கோர் முதற்படியாகும். உறுப்பினர்களுக்குவேண்டிய தகவல்களை வழங்குவது மிக முக்கியமாகும். கடையிலும், கிளைக்கூட்டங்களிலும், கல்வி வட்டங்கள்மூலமும் இத்தகவல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படலாம்.

தேசிய சம்மேளனமும், கூட்டுறவுக் கலாசாலையும் மாவட்டக்கல்வி நிலையங்களும் கவர்ச்சியான தகவல்கள் நிறைந்த பிரசுரங்களை வெளியிடுதல் இன்றியமையாதது.

கிளைக்குழுக்களின் நிலையை வலுப்படுத்துவதற்கும், அக்குழுக்களிலேஉறுப்பினர்கள் மேலதிக கவனம் செலுத்தத் தூண்டும் முகமாகவும், சங்கத்தின் பொதுக்கூட்டம் விரைவிலே கூட்டப்படவேண்டியது அவசியம். மேலும் சங்கத்தின் அலுவல்களைக் கட்டுப்படுத்துவதற்கு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நெறியாளர்குழு எப்பொழுது நிறுவப்படும் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தல் வேண்டும். அப்பொழுதுதான் உறுப்பினர்கள் உற்சாகமாகச் சங்க அலுவல்களில் பங்குபற்ற உந்தப்படுவார்கள்.

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் | -04 |
| 2. | கடன் முறிப்பத்திரம் | -05 |
| 3. | மத்தியஸ்தத்திற்கு மனு | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் | -05 |
| 5. | அங்கத்தவர் பாஸ் புத்தகம் (நாணய சங்கம்) | -25 |
| 6. | ப. நோ. கூ. சங்கப் பாஸ்புத்தகம் | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு | 8-00 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) | 3-50 |
| 9. | ,, (பண்டசாலை) | 9-00 |
| 10. | கடன் இடாப்பு | 4-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு | 2-25 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) | 7-00 |
| 14. | ,, (ப. நோ. கூ. சங்கம்) | 6-00 |
| 15. | சிட்டைப்புத்தகம் 20/1 | 3-25 |
| 16. | ,, 8/1 | 3-75 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் | -20 |
| 18. | பொருள் பேரேடு | 7-00 |
| 19. | அங்கத்துவ மனுப்பத்திரம் | -03 |
| 20. | பங்கு இடாப்பு | 3-50 |
| 21. | பங்குப்பணச் சிட்டை | 1-30 |
| 22. | விலைபொருள் இடாப்பு | 6-25 |
| 23. | உபவிதிகள் ப. நோ. கூ. சங்கம் | -40 |
| 24. | விவசாயக் கடன் மனுப்பத்திரம் | -10 |
| 25. | விவசாயக் கடன் முறிப்பத்திரம் | -05 |
| 26. | நெசவுச் சங்க உபவிதிகள் | -40 |
| 27. | சமாசங்களின் கணக்குமுறை | 2-50 |
| 28. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதிகள் | -45 |
| 29. | ரொக்கவிற்பனவுச் சிட்டை (நெசவு) | 2-00 |
| 30. | கடற்தொழிலாளர் கூ. க. வி. சங்க உபவிதிகள் | -7 |
| 31. | நடைமுறைவிதிகள் (கடற்தொழிலாளர் சங்கம்) | -755 |
| 32. | உறுப்புரிமை விண்ணப்பப்பத்திரம் | -05 |
| 33. | நியமன விண்ணப்பம் இல. 2 | -04 |
| 34. | ,, இல. 3 | -04 |
| 35. | கொள்வனவு பாஸ் புத்தகம் | -75 |
| 36. | கூட்டுறவுக்கொடி (பெரியது) | 5-00 |
| 37. | ,, ,, (சிறியது) | 2-00 |
| 38. | ஊழியர் சகாயநிதி-பத்திரம் 'சி' புத்தகம் | 5-00 |

**தேசீய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)**

**காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்**

## வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

**அரங்க அமைப்பு ஆசன அமைப்பு**

**மின்னொளி அமைப்பு**

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 2 மணித்தியாலங்கள் | 200-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

Published by the Jaffna District Committee, National Cooperative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at N. P. Co-op. Printing & Publishing